LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2009/2010 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2011)

## TLS 3103 தொல்காப்பியம் பொருளதிகாரம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

01. தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா வைப்பு முறை பற்றி விளக்கி, அந்நூற்பாக்களை விளங்கிக்கொள்வதிலுள்ள பாட, உரை விளக்கச் சிக்கல்களை ஆராய்க.

02. "முதல்-கரு-உரி என்ற எண்ணக்கருவினூடாகத் தொல்காப்பியர் அகத்திணைப்பாடல்களுக்கான கவிதைக் கோட்பாட்டினை வகுத்துள்ளார்." விளக்குக.

03. புறத்திணைகளாகக் கூறப்படுவன ஒவ்வொன்றையும் அகத்திணை-யொவ்வொன்றினதும் புறமாகத் தொல்காப்பியர் கொள்ளும் முறைமை ஏற்புடைத்தானதா? விளக்குக.

04.(அ) வாகைத்திணை பற்றித் தொல்காப்பியர் கூறியவற்றைத் தொகுத்துத் தருக.

(ஆ) வாகைத்திணை பற்றித் தொல்காப்பியம் கூறுவன எந்த அளவுக்கு புறத்திணை மரபுடன் இயைபுபடுகின்றன என்பது பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

05.(அ) செய்யுளியலில் தொல்காப்பியர் யாப்புப் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் கூறுவனவற்றைச் சுருக்கமாகத் தருக.

(ஆ) தொல்காப்பியம் குறிப்பிடும் பா அல்லாத யாப்பு வகைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குக் குறிப்புரை எழுதுக.

(அ) உள்ளுறை உவமம்
(ஆ) கைக்கிளை பெருந்திணை
(இ) திணைப்பெயர், திணைநிலைப் பெயர்
(ஈ) கொடிநிலை, கந்தழி, வள்ளி
(உ) பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்

*****